1970 மார்ச் 14]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது சர்வே நடந்து கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு அமுல் நடத்தப்படும்.

வடலூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்

* 387 வினா—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டம், வடலூரிலுள்ள தொழிலாளர்களுக்கு சமூக இன்ஷ்யூரன்ஸ் ( ) திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஆம்.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்தத் திட்டத்தை எப்போது ஆரம்பிக்க உத்தேசம்? தேதி ஏதாவது குறிப்பிடப்படுமா? இன்று வடலூரில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தொழிற்பேட்டை ஒன்றும் ஆரம்பிக்க இருப்பதனால் உடனடியாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற ஆர்வத்தைப்போலவே எங்களுக்கும் இந்த வடலூர்ப் பகுதியில் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. டெல்லியில் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்தான் இதற்குத் தடையாக இருக்கிறது. முதலில் இரண்டாயிரம் தொழிலாளர்களுக்கான மருத்துவ மனைத் திட்டம் ஒன்றை அனுப்பியிருந்தோம். இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஒரு தொழிலாளிக்கு ஒரு ஆண்டுக்கு 48 ரூபாய் செலவுக்குமேல் இல்லாதிருக்கும்படியாகவும் திருத்தி அனுப்பச் சொல்லியிருந்தார்கள். அதை நாங்கள் ஒப்புக் கொள்வதற்கில்லை என்றும், எங்களுடைய திட்டத்திற்கு இசைவு தரும்படியாகவும் எழுதியிருக்கிறோம். இடையில் மருத்துவ மனையை வாடகைக் கட்டடத்தில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேட்டூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

* 388 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

[1970 மார்ச் 14

(இ) இந்தத் திட்டத்துக்கான மதிப்பீடுகளும், இந்த மருத்துவ மனையில் இருக்கக்கூடிய படுக்கை வசதிகளும் குறித்த விவரங்கள் யாவை?

(உ) இதற்குத் தேவையான நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிந்து விட்டனவா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) மேட்டூர் அணைப் பகுதியில் குடியிருக்கின்ற ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அகத்துள்ள பிணியாளர்களுக்கான சிகிச்சை வசதிகள் செய்யும்பொருட்டு மேட்டூர் அணைப் பகுதியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருந்தது. தற்போது புது டில்லியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதி நிலை இடருற்றிருப்பதால் அச் செயற்குறிப்பு தற்போது கைவிடப் பட்டுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: மேட்டூரிலே தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. மருத்துவ மனை அங்கே பிரிவு பிரிவாக வைக்கப்பட்டிருந்தாலும் படுக்கை வசதி இல்லாததனாலே சிரமமாக இருக்கிறது. இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி நோயாளிகள், அரசாங்க மருத்துவ மனையில் படுக்கைக்கு ரிஜிஸ்தர் செய்யப்படுகிறார்கள் என்றாலும், இவர்கள் அங்கே சரியான முறையில் வைத்திய வசதியைப் பெற முடியாதிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரிந்திருப்பதால் இந்த 50 படுக்கைகளுக்கான மருத்துவ மனைக்கு இடம் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால், உடனேயே விரைவில் அவசரமாக இதை அங்கே அமைக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: முன் கேள்விக்குச் சொன்ன பதிலைப்போலவே இதற்கும் சொல்ல வேண்டியிருக்கிறது. 24 லட்சம் ரூபாய் செலவில் மேட்டூர் பகுதியிலே 12 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை அமைப்பதற்கு ஏற்பாடு செய்தோம். புது டெல்லியில் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இதை நிறுத்திவைக்கும்படியும் ஆணை பிறப்பித்தது. அதன்காரணமாக நில ஆர்ஜித வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதுபற்றிப் பொதுவாகக் கொள்கை முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் மத்திய அரசின் தொழில் அமைச்சருடன் கடிதப் போக்குவரத்து செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]